# ‘இந்தியா’ பயண நூலில் இடம் பெற்ற பண்டைக்கால வரலாற்றுக் குறிப்புகள் ஆய்வு

# A Study of Historical References Mentioned in Indian Travel Books

முனைவர் ஆர் சுப்புலெட்சுமி / Dr. R. Subbulakshmi[1]

Date of submission: 2023-05-21
Date of acceptance: 2023-06-10
Date of Publication: 2023-07-30
Corresponding author’s Name:
Dr. R. Subbulakshmi
Email: subbulakshmisri1968@gmail.com

**Abstract**

Language is an important component of human life, and this essay highlights this statement. Ternier, a French pilgrim, and Manusi, an Italian pilgrim, researched the structure and appearance of the Krishna Temple in North Madurai, India. Both studies are analysed and articulated in this paper. The India travel book mentions Jandar Mandir, an ancient space research station in India. In addition, other textual evidence reveals that India was a pioneer in the technology of Agni Astra. The travel book also mentions Nalanda University, a Buddhist university since ancient times, with information about the number of students and teachers it entails. However, it is necessary to highlight the conflicting messages when comparing the travel book with history books. The travel book states that 2000 years ago, Rajagiri was the capital of Ashoka's father, Bimbisara, which contradicts the statements in published history books that mention that Ashoka’s father was Bindhusara, not Bimbisara, and his capital was Pataliputra, not Rajagiri. Additionally, Girivraja, a hot spring hill, was mentioned to be the first capital during the time of Bimbisara, the founder of the Haryanka dynasty who laid the foundations of Magadha, the father of emperor Ajatasatru. Research reports have described and explained the ancient Hindu kingdoms and the reasons for the invasions of cities like Vadamadurai, Ayodhya, and Kashi.

**Keywords:** The Indian Travel Book, Rajagiri, ARU. Somasundaram, Ternier and Manusi, Jandar Mandir, Nalanda University

**முன்னுரை**

மானிடப் பிறப்பெடுத்த அனைவரும் அவரவர் தாயறிந்த மொழியினைத் தானறிந்து கொண்டு வாழத் தொடங்குகின்றனர். அதில் பலருடைய வாழ்வில் தாய்மொழி வாய்மொழியாக மட்டும் அமைந்து அதன் வழி உலகியல் வாழ்வினை வாழ்ந்து முடித்து விட்டுச் சென்றவர்கள் பல கோடி. வாய்மொழியாகக் கொண்ட தாய்மொழியில் அல்லது வேறொரு மொழியில் எழுத்தறிவு பெற்ற பின்பு அம்மொழியைக் கருவியாகக் கொண்டு அவரவர் தனித்திறன்களைப் பிரதிபலிக்கும் ஆற்றலினைப் பெற்றவர்கள் படைப்பாளிகளாக விளங்குகின்றனர். அத்தகைய படைப்பாளிகளில் ஒருவரான அரு.சோமசுந்தரனார் எழுதிய ‘இந்தியா பயணம்’ என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு அந்நூலில் இடம் பெற்ற வரலாற்றுச் செய்திகளைப் பிற நூற் சான்றுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பண்டைய இந்தியாவின் நிலையை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை

[1]The author is a Drawing Teacher cum Tamil Scholar, working in Girls Government Higher Secondary School, Sulur, Coimbatore, TamilNadu; subbulakshmisri1968@gmail.com; 9442979006

அமைகிறது. 'இந்தியா பயணம்' என்ற நூல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதால் மனிதர்கள் வாழ்வில் பயணம் முக்கியத்துவம் பெற்றதனைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

### மனிதர்கள் வாழ்வில் பயணம்

புவியில் வாழ்ந்த ஒரு பகுதி மக்களை, இன்னொரு பகுதி மக்கள் அறியாவண்ணம் சூழ்ந்திருந்த கடல், மலை போன்ற இயற்கைக் காரணிகளைக் கடந்து மக்கள் பயணிக்கத் தொடங்கிய போது உலக நாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

அதன்பின்பு மனிதர்கள் கடல், மலை ஆகியவற்றிற்கு அப்பாலும் வெவ்வேறு இயற்கைச் சூழலில், மனித இனம் வாழ்ந்து கொண்டிருப்பதனை அறிந்து கொண்ட மகிழ்ச்சியில் அந்நாட்டினரையும், அவர்கள் வாழ்கின்ற முறையினையும் அறிந்து கொள்வதில் பேரார்வம் காட்டியுள்ளனர்.

அவ்வாறு ஆர்வம் கொண்டு பயணம் மேற்கொள்ளுபவர்களைப் பயணிகள், யாத்திரிகர்கள் எனப் பெயரிட்டு அழைத்துள்ளனர். பயணிகள் தான் பயணித்தப் பகுதிகளில் கண்டறிந்தவனவற்றைப் பதிவு செய்து வெளிப்படுத்திய குறிப்புக்கள் பயணக் குறிப்புக்களாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. அக்குறிப்புக்களும் அந்நாட்டின் பண்டைய நிலையினை அறிந்து கொள்வதற்குச் சான்றாகின்றன.

அவ்வகையில் இந்தியாவில் வடமதுரையில் அமைந்திருந்த கிருஷ்ணர் கோயிலைப் பற்றி யாத்திரிகர்கள் குறிப்பிட்ட செய்திகள் இந்தியா பயண நூலில் இடம் பெற்றுள்ளன. அவை,

### டொர்னியர் என்னும் பிரெஞ்சு யாத்திரிகர்

கி.பி.1650 இல் டொர்னியர் என்னும் பிரெஞ்சு யாத்திரிகர் வடமதுரையை வணங்கி கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார் என்ற செய்தியில், 'பூரி ஜெகந்நாத், காசி ஆகியவற்றிற்கு அடுத்தாற்போல் மிகப் புகழ்பெற்றது மதுரைக் கோவில் (வடமதுரை). இதன் அடித்தளம் எட்டுக் கோண வடிவில் அமைந்துள்ளது. சிவப்பு நிறக்கற்களால் கட்டப் பெற்றுள்ளது. கற்களில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அகலமான மேடையின் மேல் கோவிலும், கிருஷ்ணர் உருவமும் அமைந்துள்ளன. 10, 12 மைல்களுக்கு அப்பால் இருந்தே இக்கோயிலைக் காணலாம். அந்த அளவு உயரமானது என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது.

### இத்தாலி யாத்திரிகர் மனூசி

இத்தாலி யாத்திரிகர் மனூசி எழுதியிருப்பதாவது என்று குறிப்பிட்ட செய்தியில், 'இக்கோவில் தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டிருந்தது. இதன் கோபுரம் 36 மைல்களுக்கு அப்பாலேயே தெரியும். தீபாவளி இரவில் இக்கோபுரத்தில் ஏற்றப்படும் விளக்குகளை ஆக்ராவில் இருந்தே பார்க்கலாம். பாதுஷா இவற்றைப் பார்ப்பார். (ப: 47 இந்தியா பயணம்) என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது.

இக்குறிப்புக்களின் மூலம் இவ்விரு யாத்திரிகர்கள் வெவ்வேறு காலக்கட்டத்தில் வந்திருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் கிருஷ்ணர் கோவில் கஜினிமுகமது, சிக்கந்தர் லோடி ஆகியோரால் கொள்ளையிட்டு அழிக்கப்பட்டுள்ளதையும், அதன்பின்பு அவ்விடத்தில் மீண்டும் மீண்டும் கோயில் எழுப்பப்பட்ட செய்திகளின் வாயிலாகவும், யாத்திரிகர்கள் கோயிலைப் பற்றி வர்ணித்தவிதமும் மாறுபடுவதன் மூலம் ஊகிக்க முடிகிறது எனலாம்.

### ஜந்தர் மந்திர்

ஜந்தர் மந்திர் பற்றிய விளக்கத்தில் ஜந்தர் மந்திர் என்பது பழங்கால விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஆகும். இங்கு சில சிறிய கட்டடங்கள் இருக்கின்றன. பழங்கால வான சாஸ்திர நிபுணர்கள் இரவு நேரத்தில் இக்கட்டடங்களில் இருந்துதான் விண்வெளியை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்து உலகுக்கு அறிவித்துள்ளனர். முற்காலத்தில் வான சாஸ்திரத்தில் நம் நாடு முன்னணியில் இருந்தது. அரசர்களின் அவையில் வான நூல் நிபுணர்களும் இடம் பெற்றிருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்த செய்தியின் உண்மையினை தெளிவுபடுத்தும் வகையில்

அமைகின்ற பிற நூற்சான்றுகள் பின்வருமாறு.

'சமயமும் விஞ்ஞானமும்' பிரிக்கவொண்ணாதவாறு பின்னிப் பிணைந்திருந்தன. நாட்டில் வானூல் மகத்தான முன்னேற்றம் கண்டிருந்தது. ஏனென்றால் வான்கோள்கள் தெய்வங்களாக மதித்துப் போற்றப்பட்டு வந்தன. விண்கோள்களுக்கும், வேளாண் நடவடிக்கைகளுக்கும் முக்கியமான பருவ காலங்களிலும், வானிலைகளிலும் ஏற்படும் மாற்றங்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாக அவற்றைப் பற்றி ஆராய்வது இன்றியமையாததாயிற்று. (ப:419 பண்டைக்கால இந்தியா) என்பதன் மூலம் வானநூல் நிபுணர்கள் அந்தந்தப் பருவ காலங்களில் வானிலையில் ஏற்படக் கூடிய மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து வேளாண் நடவடிக்கைகளுக்கு, அறிவித்து வேளாண்தொழில் சிறப்புற நடைபெறுவதற்குக் காரணமாக இருந்துள்ளனர் என்பதை ஊகித்து அறிய முடிகின்றது.

இந்தியா விண்வெளி ஆராய்ச்சியில் நிபுணத்துவம் பெற்றிருந்ததுடன் எதிரிகளை விரட்டியடிக்கக் கூடிய அக்கினி அஸ்திரம் (ராக்கெட்டின் முந்தைய வடிவம்) செய்யும் தொழிற்நுட்பத்திலும் முன்னோடியாக இருந்துள்ளது என்பதனையும் இவ்வாய்வில் எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. அதற்கானச் செய்திக் குறிப்புக்கள் பின்வருமாறு.

இந்தியாவில் ராக்கெட்டுக்கு முன்பே அக்கினி அஸ்திரம் இருந்ததே. அதை எய்பவன் அதன் திசையைத் திருப்பி தம் பக்கம் ஈர்த்துக் கொள்ளவும் முடிந்ததே என்று சிலர் சொல்லலாம் என்ற செய்தியினையும்,அதிக வெப்பத்தினை (அக்கினி) வெளியேற்றிக் கொண்டு வேகமாக அம்பு போல் பாய்கின்ற ஆயுதத்திற்கு (ஆயுதம் அஸ்திரம்) 'அக்கினி அஸ்திரம்' எனப் பெயரிட்டு அழைத்தனையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடிகின்றது எனலாம்.

தொலைபேசி கைபேசியாக மாறியது போல பிற்காலத்தில் அக்கினி அஸ்திரம் கூடுதல் தொழிற்நுட்பத்துடன் ராக்கெட்டாக வடிவமைத்துள்ளனர். ஆனால் ஆராய்ச்சியிலும், ராக்கெட்டு தொழிற்நுட்பத்திலும் சிறப்பிடம் வகித்த இந்தியா பிற நாடுகளைக் கையகப்படுத்தவோ அழிக்கவோ எண்ணாமல் தற்காப்புக்காகவே பயன்படுத்தி வந்ததனை,

"18ஆம் நூற்றாண்டில் 1760இல் மைசூரை ஆண்ட ஹைதர் அலி தமது படையில் ராக்கெட் போர் வீரர்களாகவே 1200 பேர் கொண்ட ஒரு அணி வைத்திருந்தார் என்று அவரை எதிர்த்துச் சண்டை போட்ட வெள்ளையர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றும்,

மைசூர் அருகிலுள்ள சீரங்கப்பட்டணத்துக் கோட்டையை பிரிட்டிஷ் குதிரைப் படையினர் முற்றுகையிட்ட போது, ஹைதர் அலி தன் ராக்கெட் படைகளை உபயோகித்தார். இதைக் கண்டு கர்னல் காங்கிரேவ், தாய்நாடு சென்று அதைவிடப் பெரிய ராக்கெட் உருவாக்க முயன்றதாக வரலாறு கூறுகிறது" என்றும் குறிப்பிடப்பட்ட செய்திகளின் வாயிலாக அறியலாம்.

மேலும் கர்னல் காங்கிரேவ் பிரிட்டிஷ் ராணுவ தளவாட இலாகாவின் வசதிகளைப் பெற்று சுமார் 20 ராத்தல் எடையுள்ள ராக்கெட்டுகளைத் தயாரித்தாராம். இவருக்கு 'லார்ட' பட்டம் வழங்கப்பட்டது என்றும், பிரிட்டிஷார் ராக்கெட்டின் தாக்குதலை முதலில் அனுபவித்தது இந்தியாவில்தான் என்றும் குறிப்பிடப்பட்ட செய்திக் குறிப்புக்களினைக் கொண்டு ராக்கெட் தொழிற்நுட்பம் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் சென்றுள்ளதாகக் கருத முடிகிறது.

இத்தகைய திறன் படைத்த இந்தியா சுதந்திரத்திற்குப் பின் வளர்ச்சி வேகம் இல்லாததனை அறிவுறுத்தும் வகையில்,

அக்கினி அஸ்திரம் ராக்கெட்டாகவே இருந்திருக்கலாம் என்று சொல்பவருடன் எனக்குச் 'சண்டை' இல்லை. ஆனால் அது தொடர்பு அறுத்து போன 'காரியம்' அதை இப்போது சொல்லிக் கொண்டு பெருமையடித்துக் கொண்டு செயல்படுத்துவது எதுவுமில்லாமல் தேங்கிக் கிடப்பதில்

பொருள் இல்லை என்பதான செய்தியும் இடம் பெற்றுள்ளது. (அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம்) விழிப்புணர்வின்றி இருந்த இந்தியாவின் நிலையினைத் தட்டி எழுப்புகின்ற வகையில் 1970இல் எழுதப்பட்ட இந்நூல் வெளியீட்டிற்குப் பின்பு 1974இல் இந்தியா அணுகுண்டு சோதனை செய்து உலக அரங்கில் ஆறாவது இடத்தினைப் பெற்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக இவ்வாய்வின் மூலம் கருதமுடிகின்றது.

அடுத்து பண்டைய காலத்தில் கல்வியில் மிகச்சிறந்து விளங்கிய நாலந்தாப் பல்கலைக்கழகம் மற்றும் சீன யாத்திரிகர் யுவான்சுவாங் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

**நாலந்தாப் பல்கலைக்கழகம்**

இந்தியா பயணநூலில் நாலந்தாப் பல்கலைக் கழகம் பற்றிக் குறிப்பிட்ட செய்தியில்,

'ஹர்ஷர்' காலத்தில் நாலந்தாப் பல்கலைக்கழகம் மிகவும் புகழ் பெற்றிருந்தது. அக்காலத்தில் அங்கு வந்து படித்து பணியாற்றிய யுவான்சுவாங் என்னும் சீன யாத்திரிகர் அது பற்றி மிக அருமையாக வர்ணித்திருந்தார் எனக் குறிப்பிட்ட பின்பு, பத்தாயிரம் பேராசிரியர்கள் பணியாற்ற, பல்லாயிரம் மாணவர்கள் உலகெங்கிலும் இருந்து வந்து பயின்றுள்ளனர். நம் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தர்மபாலர் என்பவர் துணைவேந்தராகப் பதவி வகித்துள்ளார். அப்பல்கலைக்கழகம் பிற்காலத்தில் எதிரிகள் படையெடுப்பால் அழிந்து மண்மேடாகி விட்டது. இப்பொழுது ஒரு புத்த மதப் பல்கலைக்கழகம் இருக்கிறது, பாலிமொழி இங்கு பாடமொழியாகும் எனத் தற்போதைய நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்செய்தியினைக் கொண்டு நாளந்தாப் பல்கலைக்கழகம் பற்றியும், சீன யாத்திரிகர் யுவான்சுவாங் பற்றியும் கூறுகின்ற பிற நூற்சான்றுகளையும் ஆராய்ந்து தெளிவது அவசியம் என்பதனடிப்படையில் இடம் பெறுகின்ற செய்திகள் பின்வருமாறு.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில் நாளந்தாவிலுள்ள பிரமாண்டமான மடாலயக் கல்விக்கூடத்தை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும். இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை மட்டுமின்றி திபெத்தையும், சீனாவையும் சேர்ந்த மாணவர்களையும் இந்த பிரசித்தி பெற்ற கல்விக்கூடம் கவர்ந்து ஈர்த்தது. தேர்வுகள் தரம் மிகக் கடினமாக இருந்தது. துவார பண்டிதரால் அல்லது வாசலில் உள்ள அறிஞரால் நிர்ணயிக்கப்பட்ட தேர்வில் வெற்றி பெற்றவர்கள் மட்டும்தான் இந்தப் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். தங்கிப் படிக்கும் கல்வி நிலையத்தின் ஆரம்பகால முன்மாதிரிகளில் ஒன்றாக நாளந்தாப்பல்கலைக்கழகம் திகழ்ந்து வந்தது.

இங்கு ஆயிரக்கணக்கான மடத்துறவிகள் தங்கி கல்வியிலும் தத்துவ விசாரணையிலும், தியானத்திலும் ஈடுபட்டிருந்தனர். (ஆர். எஸ்.சர்மா தமிழில் மாஜினி 2005) என்பதன் மூலம் பல்கலைக்கழகம் புகழ் பெற்றதற்கான காரணத்தினை ஊகித்தறியலாம்.

அடுத்து, நாளந்தா (பீகாரில் பாட்னாவுக்கு 56 மைல் தூரத்தில்) என்னும் இடத்தில் மிகப் புகழ் பெற்ற பௌத்த பல்கைலைக்கழகம் ஒன்று விளங்கியது. 10,000 மாணாக்கர்களும், 1500 சிறப்புற்ற ஆசிரியர்களும் அங்கு இருந்தனர். கன்னோசி வேத மதம் கல்வி நிலையமாகத் திகழ்ந்தது. (சரித்திர நூல்) என்ற செய்தியும் நாளந்தாப் பல்கலைக்கழகம் புகழ் பெற்றிருந்ததனை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்விரு சான்றாதாரக் குறிப்புக்களைக் கொண்டு நாளந்தாப் பல்கலைக்கழகம் பற்றி இந்தியா பயண நூலில் விவரித்த செய்திகள் உண்மையெனினும் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய ஆசிரியர் மற்றும் பயின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை மாறுபட்டு சொல்லப்பட்டிருப்பது கவனத்திற் கொள்ள வேண்டியதாகிறது. அத்துடன் பழங்காலத்திலிருந்தே நாளந்தாப் பல்கலைக்கழகம் புத்தமதம் பல்கலைக்கழகமாக இருந்துள்ளதனையும் குறிப்பிட வேண்டியதாகிறது.

## சீன யாத்திரிகர் யுவான் சுவாங் பற்றிக் குறிப்பிடும் பிற நூற் குறிப்புகள்

சீன யாத்திரிகர் ஹீவான்சாங் ஹர்ஷரின் இராச்சியத்துக்கு வருகை தந்தது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். அவர் கி.பி.629இல் சீனாவை விட்டுப் புறப்பட்டார். நீண்ட நெடும்பயணம் செய்து இந்தியாவை அடைந்தார். பல ஆண்டுகள் இந்தியாவில் தங்கியிருந்து விட்டு கி.பி.645இல் சீனாவுக்குத் திரும்பினார். பீகாரிலுள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக அவர் வந்தார். ஹர்ஷரின் அரசவையில் அநேக ஆண்டுக்காலம் செலவிட்டார். இந்தியாவில் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்தார். (பண்டைக்கால இந்தியா) என்ற செய்தியும்,

சிறந்த கவிவாணராகத் திகழ்ந்த ஹர்ஷரின் காலத்தில் வந்த சீன தேச யாத்திரிகர் ஹியூன்சாங் (கி.பி. 629644) அவரையும், அவரது ஆட்சி மாண்பினையும் புகழ்ந்துள்ளார். (சரித்திர நூல்) என்ற செய்தியும் பல்கலைக்கழகம் மிகச் சிறந்து விளங்கியதனை எடுத்துக்காட்டுவதற்கு சான்றாகின்றன எனலாம்.

மேலும் இந்தியா பயணம் நூலில் 'யுவான் சுவாங்' என்றும், சரித்திர நூலில் 'ஹியூன் சாங்' என்றும், பண்டைக்கால இந்தியா நூலில் ஹீவான் சாங் என்றும் குறிப்பிட்டிருப்பதன் மூலம், பிற நாட்டு யாத்திரிகரின் பெயர் உச்சரிப்பில் உள்ள ஒலி மாறுபாடுகளை அறிய முடிகின்றது எனலாம். இந்தியா பயண நூலில் நாலந்தா என்றும், பண்டைக்கால இந்தியா நூலில் நாளந்தா என்றும் குறிப்பிடப்பட்ட 'ல'கர வேறுபாட்டினை அறியலாம்.

அத்துடன் சரித்திர நூல், பண்டைக்கால இந்தியா ஆகிய இவ்விரு வரலாற்று நூல்களிலும், யுவான் சுவாங் இந்தியாவில் தங்கியிருந்த ஆண்டுகளை மிகத் துல்லியமாகக் குறிப்பிட்டிருப்பது நாளந்தாப் பல்கலைக்கழகம் கல்வியில் மிகச் சிறந்து விளங்கியதற்குச் சான்றாக எடுத்துக்காட்ட முடிகின்றது எனலாம்.

அடுத்து மிகப் பரந்த கடற்பகுதியில் நாழிக்கிணற்றில் தண்ணீர் ஊற்றெடுப்பது போல பனி சூழ்ந்த குளிர்ப் பகுதியில் அமைந்துள்ள வெந்நீர் ஊற்றுக்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

## இந்தியாவில் அமையப் பெற்ற வெந்நீர் ஊற்றுக்கள்

இந்தியாவில் பத்ரிநாத்திலும், கேதார்நாத்தில் கௌரி குண்டம் என்ற இடத்திலும், இராஜகிரி மலைக்கு மேல் மூன்று பர்லாங்கில் ஒரு வெந்நீர் ஊற்றும் அமைந்திருக்கின்ற செய்தி இந்தியா பயண நூலில் இடம்பெற்றுள்ளது. இராஜகிரி மலை மேல் அமைந்துள்ள வெந்நீர் ஊற்றினைக் குறிப்பிடும் போது இராஜகிரி பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவை,

### இராஜகிரி

இராஜகிரி மலைமேலுள்ள வெந்நீர் ஊற்றினைக் குறிப்பிடுவதற்காக, இராஜகிரி ஊரினை அடையாளப்படுத்திக் கூறும் போது இராஜகிரியின் முற்பெருமை கூறப்பட்டுள்ளது. அதாவது நாளந்தாவிலிருந்து 10 மைல் தொலைவில் இராஜகிரி என்ற சிறிய மலைப்பகுதி உள்ளது. இது 2000 ஆண்டுகளுக்கு முன்பு அசோகரின் தந்தை பிம்பிசாரரின் தலைநகராக இருந்தது. இது இப்பொழுது ஒரு சிற்றூராக இருக்கிறது. பேருந்து நிலையம் மிக வசதியாக அமைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

இச்செய்தியில் அசோகரின் தந்தை பிம்பிசாரரின் காலத்தில் இராஜகிரி தலைநகரமாக விளங்கியது என்று பதிவிடப்பட்ட செய்தி தவறு என்பதனை இங்குச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் மௌரியப் பேரரசு ஆட்சிக் காலத்தில் மன்னராக விளங்கிய அசோகரின் தந்தை பெயர் பிந்துசாரர். இவர் காலத்திற்கு முன்பு மகதப் பேரரசின் மன்னராக விளங்கிய அஜாதசத்ருவின் தந்தை பிம்பிசாரர் ஆட்சியின் போது இராஜகிரி மகதத்தின் முதல் தலைநகரமாக விளங்கியதனை,

மகதத்தின் ஆரம்ப காலத் தலைநகரம்

ராஜ்கீரில் அமைந்திருந்தது. அது அந்நாட்களில் கிரிவ் ராஜா என அழைக்கப்பட்டது. அதைச் சுற்றிலும் ஐந்து குன்றுகள் இருந்தன. எல்லாப் பக்கங்களிலும் இந்தக் குன்றுகளுக்கு இடையேயான இடைவெளி கற்சுவர்களைக் கொண்டு அடைக்கப்பட்டிருந்தது. இது இராஜ்கீரை வெல்லற்கரியதாகிவிட்டது (ப178) என்ற செய்தியினைச் சான்றாகக் கொண்டு பிம்பிசாரர் வேறு, பிந்துசாரர் வேறு என்பதனை எடுத்துக்காட்டும் வகையில் இவ்வாய்வுச் செய்தி அமைந்துள்ளதாகக் கருத முடிகிறது.

மேலும் அவந்தி நாட்டின் அச்சுறுத்தலினைத் தடுக்கும் பொருட்டு அஜாதசத்ரு ராஜ்கீரைச் சுற்றிலும் அரண் அமைத்து அதனை வலுப்படுத்துவதில் ஈடுபட்டான். இந்த அரண்களின் இடிபாடுகளை இன்றளவும் பார்க்கலாம் என்ற செய்தியும் அஜாதசத்ருவின் தந்தை பிம்பிசாரர் காலத்தில் இராஜகிரி தலைநகராக விளங்கியதனை உறுதிபடுத்துவதாக அமைந்துள்ளது எனலாம்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு தலைநகரமாக விளங்கிய இராஜகிரி தற்போது சிற்றூராகக் காட்சியளிப்பதனை அடிப்படையாகக் கொண்டு அன்றைய காலக்கட்டத்தில் இந்தியாவின் மக்கள் தொகை என்னவாக இருந்திருக்கும் என நினைத்துப் பார்க்க வேண்டியதாகிறது. ஏனெனில் பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகை முப்பது கோடியாக இருந்ததனை, பாரதியார் பாடிய ‘முப்பதுகோடி முகமுடையாள்’ என்ற பாடல்வரி மூலம் அறிகின்றோம். மனிதவளம் குறைந்திருந்த காலத்தில், மனிதர்களுக்குத் தேவையான பொருட்கள் மட்டுமின்றி, குடில்கள் முதல் கோபுரங்கள் கட்டமைப்பது வரை எல்லாத் தொழில்களும் பிற உயிரினங்களின் துணையுடன் மனிதத்திறனால் செய்யப்பட்டுள்ளது. எனவே இயற்கை வளம் மிகுந்திருந்த இந்தியாவின் மக்கள் எழுத்தறிவை விட தொழிலறிவு நிரம்பப் பெற்றவர்களாக இருந்துள்ளனர். தற்போது தனி மனிதத் திறன் நலிவுற்று தொழில்கள் இயந்திரமயமாகி, தொழிற்கூடங்கள் பெருகி, மனித வளத்தின் அசுர வளர்ச்சியால் கரை காணாக் கடல் போல நிலம் காணா பூமியாக உலகம் உருமாறி வருவதைக் காண முடிகின்றது. இயற்கை நியதிக்கு மாறாக பூமியையும் ஒரு வியாபாரப் பொருளாக மாற்றிவிடும் அபாயப்போக்கு நிலவும் என்பதனைத் தொலைநோக்குப் பார்வையால் உணர்ந்து பூமி திருத்தி உண் என்று ஔவையார் மனித இனத்திற்கு சொல்லிச் சென்றதனை நினைவுகூர வேண்டியது அவசியமாகிறது.

பல்லுயிரினங்களின் வாழிடங்களை ஆக்கிரமித்து, மனித இனமே தலையாய இனமாக வலுப்பெற்று வருகின்ற போக்கு புவியினை நிலைகுலையச் செய்வதாக உள்ளது எனலாம். மேலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இராஜகிரி மகதப் பேரரசின் அடையாளச் சின்னமாக நிலைத்து நின்று பண்டைய இந்திய வரலாற்றினை உணர்த்துவதாகக் கருதமுடிகிறது.

அடுத்து தொன்மைக்கும் தொன்மை நகரமாக விளங்கக் கூடிய காசி மாநகரம் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

**காசி**

காசியின் மூதாதையரைப் பற்றி ணி.ஙி.ஹாவெல் என்பவர் கூறுவதாவது ‘ஆரிய இனத்தார் கீழ்த்திசை நோக்கிப் பரவியபோது வளமான கங்கைவெளிப் பிரதேசத்தில் வந்து குடியேறினர்’. ஷெர்ரிங் என்பவர் கூறுவதாவது, காசி மிகப் பழமை வாய்ந்தது. 2600 ஆண்டுகட்கு முன்பு, அதாவது பாபிலோனியா நினேவாவா எதிர்த்துப் போராடிய பொழுது, டைர் குடியேற்ற நாடுகளை உண்டாக்கிய பொழுது ஏதன்ஸ் பலம் பொருந்திய அரசாக உருவாகியபொழுது ரோமாபுரி புகழ்பெறுமுன் நெபுச்சன்னகர் செருசலத்தைக் கைப்பற்றிய பொழுது காசி புகழ் பெற்றிருந்தது.

இத்தகு புகழ் பெற்ற காசியை 11ஆம் நூற்றாண்டில் கஜினி முகம்மது படையெடுத்து வென்றதனையும், பின்பு குத்புதீன் கொள்ளையடித்ததையும், கி.பி.1669 இல் ஔரங்கசீப் காசியை அழித்தது இப்படியாகத்

தொடர் படையெடுப்புக்களுக்குள்ளாகி வந்த காசி ராஜ்ஜியம் 16101949இல் இந்திய அரசில் இணைந்தது வரை (ப9698 இந்தியா பயணம்) குறிப்பிட்ட செய்திகள் இந்தியாவின் பழைய வரலாற்றினை மீள்பார்வை செய்யும் விதமாக அமைந்துள்ளன எனலாம்.

## அயோத்தி

காசியைப் போல் அயோத்தி மாநகரமும் பாதிப்புக்குள்ளாகியதைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளுடன் பயணநூல் எழுதுகின்ற போது இருந்த நிலையினையும் விவரித்து எழுதிய செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

டில்லியில் திவானி காஸ் என்னும் மாளிகையில் உலகப் புகழ் பெற்ற மயிலாசனம் இருந்தது. அது இப்பொழுது இங்கிலாந்தில் உள்ளது (ப67 இந்தியா பயணம்)

காசி, அயோத்தி, வடமதுரை ஆகிய மாநகரங்களின் மேல் தொடர் படையெடுப்புகள் நடத்தியதற்கான காரணங்களையும் ஆராய வேண்டியது அவசியமாகிறது. அவ்வகையில் இடம் பெறுகின்ற செய்திகள் பின்வருமாறு,

1. உலகில் மெக்கா, பெத்லஹேம் போன்று வடமதுரை, அயோத்தி, காசி போன்ற நகரங்களும் புனிதத்துவம் வாய்ந்தவை. அத்துடன் வடஇந்தியாவில் விளங்கிய பண்டைய இந்து இராச்சியங்களில் காந்தாரம், குரு, பாஞ்சாலம், கோசலம், வத்ஸம், விதேகம், அங்கம் ஆகிய ஏழு இராச்சியங்கள் மிகப் புகழ் பெற்ற இராச்சியங்களாகத் திகழ்ந்துள்ளன. அவற்றில் காசி, உஜ்ஜையினியைத் தலைநகராகக் கொண்ட விதேகம் (வடபீகார்), அயோத்தியை தலைநகராகக் கொண்ட கோசலம் (உத்தரப்பிரதேசத்தில் ஔத்) (ப 36 சரித்திர நூல்) ஆகியவை இந்தியாவின் தனித்துவத்தினைப் பிரதிபலிக்கும் தலைசிறந்த தலைநகரங்களாகத் திகழ்ந்துள்ளன. எனவே இவ்விரு தலைநகரங்களும் தொடர் படையெடுப்புகளுக்குள்ளாகியிருக்கின்றன எனலாம்.

## வடமதுரையின் மேல் படையெடுப்பு நடத்தியதற்கான காரணம்

வடமதுரையானது விரஜ பூமி என்றழைக்கப்பட்டுள்ளது, அதாவது பண்டைய காலத்திய இந்து இராச்சியங்களுள் சில குடியரசுகளாகவும் இருந்துள்ளன. இவற்றில் முக்கியமானவை கபிலவஸ்துவைத் தலைநகராகக் கொணட் சக்கியர் நாடும் (நேபாளம்) மகத்ததின் வடக்கில் வைசாலியைத் தலைநகராகக் கொண்ட விரச்சியர்களின் நாட்டுக் கூட்டமும் ஆகும். (ப38 சரித்திர நூல்) என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் தனித்துவத்திற்கு அடையாளமாக விளங்கிய வடமதுரை (கிருஷ்ணன் பிறந்தது) விரச்சியர்களின் நாட்டுக்கூட்ட பூமியில் இடம்பெற்றுள்ளதனை ஊகிக்க முடிகிறது.

எனவே வடமதுரையை விரஜ பூமி என்று சரித்திரம் கூறும் (ப43) என இந்தியா பயணநூலில் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டைய காலத்தில் தரைக்கூட்டம், நாட்டுக்கூட்டம் என்றழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதில் நாட்டுக்கூட்டம் என்பதற்கு நுட்பமான பொருள் புலப்படாவிடினும் அவ்வாறு அழைக்கும் வழக்கம் இருந்துள்ளதனை,

தரைகளின் அவைகள் தரைக்கூட்டங்களெனவும், நாடுகளின் அவைகள் நாட்டுக் கூட்டங்களெனவும் பெயர் பெற்றன. பெரும்பாலும் இம்முறை கேரளம் முழுவதும் நிலவியிருத்தல் வேண்டும் (ப190 தென் இந்திய வரலாறு) என்பதன்மூலம் அறிய முடிகின்றது. எனவே குடியரசுகளில் மிகச்சிறந்து விளங்கிய விரஜபூமியான வடமதுரையின் மேல் தொடர் படையெடுப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது எனலாம்.

## முடிவுரை

உலக நாடுகள் கண்டறியப்பட்ட பின்பு ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டிற்குப் பயணிக்கத் தொடங்கியதனை, டொர்னியர் என்னும் பிரெஞ்சு யாத்திரிகர், இத்தாலி யாத்திரிகர் மனூசி ஆகியோர்

இந்தியாவிலுள்ள வடமதுரை கிருஷ்ணர் கோயிலைக் கண்டு அதன் அமைப்பு மற்றும் தோற்றத்தினைப் பற்றி விவரித்த செய்திகள் வரலாற்றில் இடம் பெற்றதன் மூலம் அறிய முடிகின்றது. பண்டைக்கால இந்தியா வான சாத்திரத்திலும், அக்கினி அஸ்திரம் தொழிற்நுட்பத்திலும் உலகிற்கு முன்னோடியாக இருந்ததனை கொண்டு உணவுக்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் அதிமுக்கியத்துவம் அளித்துள்ளதனை ஆய்வின்வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பண்டைக்காலத்தில் கல்வியில் நாளந்தாப் பல்கலைக்கழகம் மிகச் சிறப்புற்று விளங்கியதனை அறிந்து கொள்வதற்கு சீன யாத்திரிகர் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பு மிகச் சிறந்த சான்றாக இருப்பதனை அறிய முடிகின்றது. பண்டைய இந்து இராச்சியங்கள் பற்றியும், வடமதுரை, அயோத்தி, காசி போன்ற மாநகரங்களின்மேல் தொடர் படையெடுப்பு நடைபெற்றதற்கன காரணங்களை ஆராய்ந்ததன் வாயிலாக இந்தியாவின் தனித்துவத்தினை உணர முடிகின்றது. கல்வியில் புகழ் பெற்று விளங்கிய நாளந்தாப் பல்கலைக்கழகம் மற்றும் பிம்பிசாரரின் தலைநகரமான இராஜகிரி பற்றி விளக்கிய செய்திகள் உண்மையெனினும் பிறநூற் செய்திகளோடு ஒப்பிட்டு ஆராயும் போது, மாறுபாடாகத் தோன்றிய கருத்துக்கள் தக்க விளக்கங்களுடன் விவாதித்து முடிவுரைக்கப்பட்டுள்ளது. இறுதி முடிவாக பண்டைக் காலத்திலிருந்து இந்தியா மெஞ்ஞானத்திலும் விஞ் ஞானத்திலும் மிகச் சிறந்து, தனித்திறன் படைத்த நாடாக உலக அரங்கில் இடம் பெற்றிருந்ததனை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது எனலாம்.

## References


Pillai, K.,K. (1971). *Then India Varalaru*. 3rd Edition. Arien Printers. Chennai.

Ram Saran Sharma. (2005). *Pandaikala India.* 3rd Edition. Sontham Printers.

*Sarithara Nool.* Published by Tamil Nadu Text Book Society.

Sivaraman, A.,N. (1970). *Apollo Kanda Vinveli Viññāṉam.* 2nd Edition. Dinamani Publications.

Somsundaram, Aru. (2012). India Payana Nool. 3rd Edition. Karaikudi: Ponmudi Publications.

Sri Prakasa. *Then India Varalaru.*